[1974 மார்ச் 7

மருந்தாளுநர்கள் சம்பளம்

* 319 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அரசினர் மருத்துவ மனையில் மருந்தாளுநர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு அண்மையில் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

சேலம் நகரில் சாக்கடை அமைப்புத் திட்டம்

* 320 வினு—திரு. கி. ஜெயராமன் :
திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரத்திற்கு பாதாளச் சாக்கடை (Underground Drinage) அமைப்புத் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. கி. ஜெயராமன் : தலைவரவர்களே, ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு முன்னலே இந்தத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இடையிடையே நிறுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை ஆய்வில் எடுத்துக்கொள்ளும் கால அளவு என்ன? எப்போது ஆய்வு முடியும்? அரசாங்கம் எந்த வகையில் கடன் கொடுக்க முன்வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் ஆராயப்பட்டிருக்கின்றன. முதன்முதலாக அங்கே புதை சாக்கடை மூலம் கழிவு நீர் அகற்றும் திட்டம் 1928-ம் ஆண்டில் ஆலோசிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்கள் நிதிநிலை இடம் தராததால் அவ்வப்போது இருந்த அரசாங்கங்களினுல் நிறைவேற்றப்படவில்லை.